இந்து சமய அறநிலையத்துறை

அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்

# பூச்சொரிதல் திருவிழா 2018



**நாள் : 11.3.2018 ஞாயிற்றுக்கிழமை**

**நேரம் : காலை 6.45 மணிக்கு மேல் 8.15 மணிக்குள்**

# பூச்சொரிதல் திருவிழா அழைப்பிதழ்

## நாள் : 11-03-2018 ஞாயிற்றுக்கிழமை

அன்புடையீர்,

நிகழும் ஹேவிளம்பி வருடம் திருவள்ளுவராண்டு 2049 **மாசி மாதம் 27ம் தேதி (11.03.2018)** ஞாயிற்றுக்கிழமை நவமி திதியும், மூல நட்சத்திரமும் அமிர்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் அதிகாலை **விக்னேஷ்வர பூஜை, புண்ணியாக வாசனம், அனுக்ஞை, வாஸ்து சாந்தி, அங்குரார்ப்பணம்** முடிந்து காலை 6.45 மணிக்கு மேல் 8.15 மணிக்குள் மீன லக்னத்தில் **அம்மனுக்கு காப்பு கட்டுதலுடன் தொடங்கி பூச்சொரிதல் விழா நடைபெறுகிறது.**

சிவன், பிரம்மா, விஷ்ணு என்னும் மும்மூர்த்திகளால் ஸ்ரீரங்கம் கோயிலின் ஈசான பாகத்தில் **இச்சா, கிரியா, ஞானசக்தி வடிவம்** கொண்டு சிருஷ்டிக்கப்பட்டதால் இத்திருக்கோயிலிலும் **ஸ்ரீரங்கம் திருக்கோயிலின் மூலவரைப் போன்றே சுதையினால்** ஆன சுயம்பு வடிவமாக **27 நட்சத்திரங்களின்** ஆதிக்கங்களையும் தன்னுள் அடக்கி **27 இயந்திரங்களாக திருமேனி பிரதிஷ்டையில்** இத்தலத்தில் மகாமாரியம்மன் அருள்பாலிப்பது தனிப்பெரும் சிறப்பாகும்.

அம்மனின் சுயம்பு திருமேனியில் **நவக்கிரக ஆதிக்கத்தை** உள்ளடக்கி நவக்கிரகங்களை **நவசர்ப்பங்களாக திருமேனியில்** தரித்து அருள்பாலிப்பதால் அம்மனை தரிசனம் செய்வதன் மூலம் நவக்கிரக தோஷம் நீங்கும் என்பது ஐதீகம்.

இத்தலத்தில் இருக்கும் **அம்மனை அமாவாசை, பௌர்ணமி**, மற்றும் கிரகண காலங்களில் **வழிபட்டால் உச்ச பலன் கிடைக்கும்**. மேலும் இத்தலத்தில் வழிபட்டால் ராகு, கேது திசை தோஷம் நிவர்த்தியாகும் என்பதற்கு திருக்கோயிலின் மேற்கூரையில் சிற்பச்சான்றும் உள்ளது. மேஷம் முதல் மீனம் வரையிலான **பன்னிரு ராசிகளின் அதிபதியாக** அம்மன் ஆட்சி புரிகிறாள் என்பதற்கும், மேற்கூரையில் சிற்பச்சான்றுகள் உள்ளன.

தட்சன் யாகத்திற்கு சென்ற தாட்சாயிணியை தூக்கி சிவபெருமான **ருத்ரதாண்டவம்** ஆடியபோது அம்மனின் **திருக்கண் அப்பகுதியில் விழுந்ததால்** இத்தலத்திற்கு கண்ணனூர் என்ற பெயர் புராணகாலந்தொட்டே இருந்து வருகிறது. மிகத் தொன்மையான உற்சவ **அம்மனின் திருமேனியில் இன்றும் ஆயிரம் திருக்கண்கள் உள்ளன.** இது இத்தலத்தின் புராண பெருமையை விளக்குவதாக அமைந்துள்ளது.

இத்திருத்தலத்தில் அம்மன் அஷ்டபுஜங்களுடன் வீற்றிருப்பது வேறு எந்த மாரியம்மன் கோயிலிலும் காணக்கிடைக்காத அரிய அரிய காட்சியாகும். மேலும் மாரியம்மன் வடிவங்களில் **ஆதிபீடம் சமயபுரமே** ஆகும். எனவே தான் இத்திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள மகாமாரி பதம் மாரி சிவபதத்தில் மிகப்பெரிய சுதை சுயம்பு திருஉருவமாக விக்ரமசிம்மாசனத்தில், ஆயிரம் கோடி சூரிய பிரகாசத்துடன் தங்க திருமுடியுடன், குங்கும நிறமேனியில் நெற்றியில் வைர பட்டை ஒளிவீச, வைர கம்மல்களும், வைர மூக்குத்தியும் சூரிய சந்திரனைப் போல் ஜொலித்து கண்களில் அருள் ஒளி பாலித்து, அன்னைக்கு அன்னையாய் ஆதி முதல் ஆதார சக்தியாய் நாடிவருவோர் மட்டுமின்றி நாடு தழைக்கவும், மண்ணுலக உயிர்களை காக்கவும் மாதுளம் மேனியாய், மஞ்சள் உடை உடுத்தி வாசனை மலர்களை திருமேனி முழுவதும் தரித்து காட்சி அளிக்கிறாள். மும்மூர்த்திகளை நோக்கி மாயசூரனை வதம் செய்த பாவம் நீங்கவும் உலக நன்மைக்காகவும், இத்திருத்தலத்தில் தன்னை தரிசிக்க வரும் பக்தர்களுக்கு எல்லாவிதமான நோய்களும், தீவினைகளும் அணுகாது சகல சௌபாக்கியங்களும் கிடைக்க மரபுமாறி **அம்மனே பக்தர்களுக்காக 28 நாட்கள் பச்சை பட்டினி விரதம்** வருடந்தோறும் **மாசி மாத கடைசி ஞாயிறு முதல் பங்குனி மாத கடைசி ஞாயிறு வரை** இருப்பது இத்திருக்கோயிலின் தனிப்பெரும் சிறப்பாகும். இந்த 28 நாட்களும் திருக்கோயிலில் அம்மனுக்கு தளிகை, நைவேத்தியம் கிடையாது. துள்ளுமாவு, நீர்மோர், கரும்பு பானகம் மற்றும் இளநீர் மட்டுமே நைவேத்தியமாக செய்யப்படுகிறது.

பூச்சொரிதல் விழாவிற்கு பக்தர்கள் அனைவரும் சுற்றம் சூழ குடும்பத்துடன் வந்து அம்மனை தரிசனம் செய்து எல்லா நலமும் வளமும் பெற்று வாழ அன்புடன் அழைக்கின்றோம்.

**வெங்கடேஷ் உத்தமநம்பி**
வழிமுறை அலங்காரவர்

**சி. குமரதுரை**, பி.எஸ்.சி., பி.எல்.,
இணை ஆணையர் / செயல் அலுவலர் / தக்கார்

| | | |
|---|---|---|
| பூச்சொரிதல் அழைப்பிதழ் உபயம் | : | **பொன்மணி & கோ,**<br>10 வது கிராஸ், தில்லை நகர், திருச்சி – 18. |
| பூச்சொரிதலுக்கு பூக்கள் உபயம் | : | திருமதி. **உஷாநந்தினி,**<br>திருச்சி |
| பூச்சொரிதலுக்கு சிறப்புப் பணிபுரியும் அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு உணவு உபயம் | : | "அறுசுவை மன்னன் நலபாக சக்கரவர்த்தி"<br>திரு. **கோபி,** ஸ்ரீரங்கம். |
| பூச்சொரிதலுக்கு திருக்கோயில் மின்அலங்காரம் | : | திரு. **K.பழனிமுருகன்,**<br>KPM ENGINEERING WORKS, திருச்சி. |

tnhrce.org

**அறிவிப்பு**

பூச்சொரிதல் திருவிழாவிற்கு எவரிடமிருந்தும் எவ்விதமான நன்கொடையும் பெறப்படுவதில்லை. மேலும் திருவிழா செலவினங்களுக்கு பணமாகவோ வேறு பொருள் இனங்களாகவோ எந்த விதமான நன்கொடையும் வசூலிக்க திருக்கோயில் நிர்வாகம் எவரையும் நியமிக்கவில்லை. திருக்கோயில் பெயரை பயன்படுத்தி எவரேனும் பொதுமக்களிடம் வசூல் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க திருக்கோயில் நிர்வாகத்திற்கு தெரிவிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இத்திருக்கோயிலுக்கு நன்கொடை / காணிக்கை / வரைவோலை / காசோலை செலுத்த விரும்பும் பக்தர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி உரிய ரசீது பெற்றுக்கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.


முகவரி :

**இணை ஆணையர் / செயல் அலுவலர்,**

**அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம் - 621 112,**

திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

தொலைபேசி : 0431 – 2670460.

தொலை நகல் : 0431 - 2670557,

E-mail : samayapurammariamman@tnhrce.com

Website : www.samayapurammariammantemple.in

www.samayapurammariammantemple.tnhrce.in

